செய்தி வெளியீடு எண்: 836 நாள் : 29. 9. 2010

# <u>தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இந்தியன் வங்கியின் 52 புதிய கிளைகளைக் காணொலிக் காட்சி வாயிலாக</u>

# <u>முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் புதிதாகச் செயல்பட உள்ள இந்தியன் வங்கியின் 21 கிளைகளையும், 31 ஏ.டி.எம். மையங்களையும் காணொலிக் காட்சி வாயிலாக இன்று (29–9–2010) சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்கள். இவற்றுள் தமிழகத்தில் மட்டும் 5 கிளைகளும், 21 ஏ.டி.எம். மையங்களும் அமைகின்றன.

இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 'நாடு முழுமையிலும் செயல்படும் இந்தியன் வங்கியின் 52 புதிய கிளைகளைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தியன் வங்கி தமிழகத்தில் ஒரு முன்னணி வங்கியாகச் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி மாநிலத்திலுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு பெரிதும் உதவி வருகிறது. தமிழகத்தில் மிகச்சிறந்த முறையில் செயல்பட்டுவரும் இந்த வங்கியின் தலைவர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சியின் வாயிலாகப் பாராட்டி வாழ்த்துகிறேன்' என்று குறிப்பிட்டார்கள்.

இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.சண்முகம், இந்தியன் வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. டி.எம். பாசின் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.